1981 ஏப்ரல் 3]

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைத் தொடக்கப்பள்ளியில் இருக்கிற 8-வது வகுப்பை உயர்நிலைப்பள்ளியோடு இணைப்பதாக அறிகின்றேன். அப்படியானால் தலைமை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்படுவார்களா ? தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலை என்ன ? அவர்கள் தலைமையாசிரியர்களாக உயர்த்தப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. இன்னும் அதுபற்றி முடிவு எடுக்கவில்லை. பிற மாநிலங்களில் அந்த முறையைப் பின்பற்றுகின்றார்கள். அது ஒரு சிறந்த முடிவு என்கிற கருத்தின் அடிப்படையிலே அந்தக் கருத்தை எல்லோரும் பேசவேண்டுமென்று சொல்லப்படுகிறது. முடிவு எடுக்கிறபோது நாம் பரிசீலனை செய்வோம்.

திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கியில் நடைபெற்ற முறைகேடுகள்.

*வினா எண். 616— திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்க் லிமிடெட் இ. 25 1975-ல் சுமார் 45-க்கு மேற்பட்ட முறைகேடுகள் காரணமாக ரூபாய் பல்லாயிரக்கணக்கில் பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கி செயல்படும் விதம் பற்றி விசாரணை செய்தபோது பல வேறு முறைகேடுகள் தெரிய வந்துள்ளன.

(1) 1973 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவர (16—2—1978) வரை வங்கி ஈடுபட்டு வந்த காப்புறுதி வியாபாரத்தில் கிடைத்த இன்ஷுரன்ஸ் கமிஷன் பணத்தை வங்கியின் செயலாளர் எடுத்து கொண்டது ;

(2) 31—5—1977, 20—6—1977 மற்றும் 21—6—1977 ஆகிய நாட்களில் வங்கியின் செயலாளர் பொய் கூறி பயணப்படி பெற்றுக் கொண்டது ;

(3) வங்கிக்கு வரவேண்டிய பணத்தை 28—5—1978 லிருந்து 21—9—1978 வரை வசூல் செய்த பணத்தை வங்கியின் பில் கலெக்டர் வங்கியில் கட்டாதது ; மற்றும்

(4) வங்கிக்கு வரவேண்டிய பணத்தை 9—8—1978-லிருந்து 20—9—1978 வரை வசூல் செய்ததை வங்கியின் பதிவேட்டு எழுத்தர் வங்கியில் கட்டாதது முதலியன ஆகும்.

(இ) இவ்வங்கி நல்ல முறையில் நடத்தப்படாததால், வங்கியின் நிர்வாகக் குழுவை ஏன் கலைக்கக்கூடாதென 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 72-வது பிரிவின் கீழ் வங்கியின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு 30—4—1980 அன்று நிர்வாகக் குழுவைக் கலைப்பதற்கு முன் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதிலை பரிசீலித்து கடலூர் இணைப்பதிவாளர் இவ்வங்கியின் நிர்வாகக் குழுவை கலைத்து 22—11—1980 முதல் தனி அதிகாரி மூலம் அவ்வங்கியின் நடவடிக்கைகளை கவனிக்க ஆணையிட்டுள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து 1973லிருந்து முறைகேடுகள் நடைபெற்றிருப்பது தெரிய வருகிறது. இதில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 65 என்க்யுவரி என்றாலே அதிகாரி மட்டுமே அதைத் தீவிரப்படுத்திவிட முடியாது. குற்றவாளிகளும் ஒத்துழைக்க வேண்டும். இருசாரரும் காரணமாக இருந்திருக்கலாம். அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முறைகேடுகளில் ஈடுபட்ட பணங்கள் பூராவையும் வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அதுமட்டுமல்லாமல் சீக்கிரமாக தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டிடம் ஒப்படைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகளில் ஈடுபட்டவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிக்க சட்டரீதியாக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் ஒட்டுமொத்த

1981 ஏப்ரல் 3]

மாக தமிழகத்தில் புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன், விரைவிலே நடக்க இருக்கிற தேர்தலோடு இந்தத் தேர்தலும் நடத்தப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நடிவடிக்கை எடுக்கப்படுவதாக சொன்னார்கள். அந்த பணம் கையாளப்பட்டதில், 'அபிஷியலாக' இருந்தவர்கள் எத்தனை பேர், 'நான்-அபிஷியல்' எத்தனை பேர்கள் அவர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிகாரிகள் அதில் தவறு செய்திருக்கிறார்கள் என்று எதுவும் இல்லை. இது கூட்டுறவு டிபார்ட்மெண்ட் இல்லை, சங்கம். சங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கிற டைரக்டர்கள் மற்றவர்கள், அந்த சங்கத்தை நடத்துகிற பணியாளர்கள், சிலர் அந்த தவறுகள் செய்து, அவர்கள் மீது நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. சங்கமும் கலைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட எந்த அளவிற்கு தொகை என்பதற்கு தகவல் இல்லை.

விவசாயப் பணி செய்யும் ஏழை அரிசன தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்.

*வினா எண் 617 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சௌரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலமில்லாத விவசாயப் பணியில் ஈடுபடும் ஏழை அரிசன தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் அளிக்கப்பட வேண்டியதை உறுதிப்படுத்துமாறு மாநில அரசை மத்திய அரசு வற்புறுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புதுடெல்லியில் மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், காவல் துறை, தலைமைச் செயலர்கள் மாநாட்டில் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது. விவசாய சம்மந்தமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள ஊதிய விகிதங்களை கட்டாயமாக அமுலாக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள்